# இன்றைய சீன-கனேடியர்கள்



இனவெறி மற்றும் வெறுப்புக்கு எதிரான ஆசியர்கள்

TAMIL Canadian Centre for CIVIC ACTION

Chinese Canadian National Council Toronto Chapter

Ontario

## சீன கனேடியர்களும் கனேடியர்களே

சீன கனேடியர்களின் வரலாற்றை புரிந்துகொள்வது அவசியமானது

- சீன கனேடியர்களின் பங்களிப்புகள், அனுபவங்கள் (பாகுபாடு உட்பட) பற்றி பலருக்கு தெரியாமல் இருக்கலாம், மேலும் இந்த கடந்தகால அநீதிகளை தற்போதைய நிகழ்வுகளுடன் தொடர்புபடுத்த முடியாமல் போகலாம்.




இன்று சீன கனேடியர்களைப் பார்க்கும்போது, சீனக் கனேடியர் சமூகங்கள் பலதரப்பட்டவை என்பதை நாம் அறிவோம்

1970 களில் இருந்து கனடாவின் குடியேற்ற முறை மாறியதால், சீன கனேடியர் குடியேற்றம் வேகமாக அதிகரித்துள்ளது.

- பல சீன கனேடியர்கள் சமீபத்திய ஆண்டுகளில் கியூபா, இந்தியா, ஜமைக்கா, வெனிசுலா போன்ற நாடுகளில் இருந்து குடியேறியுள்ளனர்.



# ஆசியர்களுக்கு எதிரான இனவாதத்திற்கு பொறுப்புக்கூற வலியுறுத்துதல்

**இனவெறி மற்றும் வெறுப்புக்கு எதிரான ஆசியர்கள்**

Tamil Canadian Centre for Civic Action


Chinese Canadian National Council Toronto Chapter

Ontario





நாம் "பெருந்தொற்றுக்கு பிந்தைய" காலகட்டத்தினுள் நுழையும் நிலையில், COVID-19 பெருந்தொற்றுக் காலத்தில் ஆசியர்களுக்கு எதிரான இனவாதம் அதிகரித்ததைத் தொடர்ந்து சிந்தித்துப் பார்ப்பது அவசியம்.

காலம் கடந்துவிட்டதாக சிலர் நினைத்தாலும் கூட, பொறுப்புக்கூற வலியுறுத்துவது அவசியமானது.



ஆசியர்களுக்கு எதிரான இனவாத எழுச்சியை கவனத்திலெடுப்பதற்கும் அதன் வேர்களில் உள்ள பிரச்சினையைக் கட்டுப்படுத்துவதற்கும் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன**?**





சீனா, ஹாங்காங் மற்றும் மெக்காவில் (Macau) இருந்து கனடாவிற்கு வரும் விமானப் பயணிகளுக்கு, கனேடிய அரசாங்கம் COVID-19 சோதனையில் தொற்று இல்லாமல் இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும் எனும் நடைமுறையை நடைமுறைப்படுத்தியுள்ளதால், ஆசியர்களுக்கு எதிரான மற்றொரு பாகுபாட்டையும் வன்முறை அலையையும் நாம் காணப்போகிறோமா?

# கடந்தகால பாகுபாட்டையும் அநீதியையும் தற்போதைய நிகழ்வுகளுடன் தொடர்புபடுத்தும் பணிகளை மேற்கொள்ளல்.



ஆசிய அமைப்புகளை தவறாக நடத்துவதில் தொடங்கி (கனேடிய பசிபிக் இரயில்வே கட்டுமானத்தின் போது உட்பட) ஆசியர்களுக்கு எதிரான இனவாதம் கனடாவில் வேரூன்றி உள்ளது.



**இனவெறி மற்றும் வெறுப்புக்கு எதிரான ஆசியர்கள்**

TAMIL Canadian Centre for CIVIC ACTION

Chinese Canadian National Council Toronto Chapter

Ontario

பல சீனர்களுக்கு குடியுரிமை நிலை தொடர்ந்தும் மறுக்கப்படுகிறது.



யார் குடியுரிமை நிலையைப் பெறலாம் என்பதைக் கட்டுப்படுத்துவதன் மூலம், கனேடிய அரசாங்கம் குடியேற்றவாசிகளை இனமயமாக்கி (சீனக் குடியேற்றவாசிகள் உட்பட) இரண்டாம் தர குடிமக்களாகக் கருத அனுமதித்துள்ளது "சுரண்டப்படுவதற்காக நுழைய அனுமதி வழங்கப்பட்டது ஆனால் தங்குவதற்கான சுதந்திரத்தை அனுமதிக்கவில்லை" [1]


குடியுரிமை இல்லாமல், பொருளாதாரச் சுரண்டல் உள்ளிட்ட சுரண்டல்களுக்கு மக்கள் அதிகம் முகங்கொடுக்கின்றனர்.

- உதாரணமாக, மொழித் தடைகள், ஆபத்தான குடியேற்ற நிலை, வயது போன்ற ஒழுங்குமுறை சார்ந்த சிக்கல்களால் கொடுமைப்படுத்தல், துன்புறுத்தல், ஊதியத் திருட்டு, சுரண்டல் போன்ற பிரச்சினைகளுக்கு CCNCTO உடன் தொடர்புடைய பல சீனர்கள் முகங்கொடுக்கின்றனர்.

1. Chinese Canadian National Council Toronto Chapter (CCNCTO) & Project 1907, 2022, p. 6

# இன்று சீன கனேடியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்

## இனவெறி மற்றும் வெறுப்புக்கு எதிரான ஆசியர்கள்



நாங்கள் ‘கனடாவை சேர்ந்தவர்கள் அல்ல', சீனர்கள் 'ஆரோக்கியமற்றவர்கள்,' 'பின்தங்கியவர்கள்,' 'தாழ்ந்தவர்கள்,' போன்ற கூற்றுகளுக்கு எதிராக போராடுவது அடங்கலாக சீன கனேடியர்கள் கடந்த காலத்தில் இருந்து இதேபோன்ற போராட்டங்களை தொடர்ந்து எதிர்கொள்கின்றனர்.

உதாரணமாக, பல சீன கனேடியர்கள் தங்களுடைய இனம் காரணமாக அவர்களின் கனடிய-தன்மை (மற்றும் விசுவாசம்) கேள்விக்குள்ளாக்கப்படுவதால், தொடந்ர்தும் வெளிநாட்டவராய் உணரும் தன்மையை (perpetual foreigner syndrome) எதிர்கொள்கின்றனர்.


"நீங்கள் உண்மையில் எங்கிருந்து வருகிறீர்கள்?" என்ற பொதுவான கேள்வி பல சீன கனடியர்களைத் தொடர்ந்தபடியுள்ளது




யார் கனேடியர் என்ற பாரம்பரிய கருத்தாடலில் இருந்து விலக்கப்பட்டதால், 'சட்டரீதியான, தலைமுறைசார்ந்த, அல்லது கலாசாரம் சார்ந்த நிலையை பொருட்படுத்தாமல்,'' , சீன கனடியர்கள் தொடர்ந்து[2] வெளிநாட்டவர்களாகவே பார்க்கப்படுகிறார்கள்.

சீனாவிற்கும் 'மேற்கிற்கும்' இடையேயான அரசியல் பதற்றம், SARS பரவல் (2002-2004), COVID-19 பெருந்தொற்றுப் பரவல் உட்பட உலகளாவிய நெருக்கடி காலங்களில், விரோதத்தை எதிர்கொள்ளும் அனுபவம் சீன கனேடியர்களுக்கு அதிகரித்தது.



இந்த சிந்தனையில், சீன கனேடியர்கள் எப்போதும் சீனர்களாகவே இருப்பார்கள், கனடியர்களாக அல்ல

2. CCNCTO & Project 1907, 2022, p. 7


# இந்த சிந்தனையில், சீன கனேடியர்கள் எப்போதும் சீனர்களாகவே இருப்பார்கள், கனடியர்களாக அல்ல


ஒரு ‘முன்மாதிரி சிறுபான்மையினராக’ ஆசிய மக்கள் ஏனைய இனமயமாக்கப்பட்ட மக்களுக்கு ஒரு முன்னுதாரணமாக கருதப்படுகிறார்கள். 'முறைப்பாடு' செய்வதை விடுத்து, கடின உழைப்பில் ஈடுபடுதல் வெற்றியைத்தரும் என்பதற்கு ஆசிய மக்கள் ஒரு முன்மாதிரியாக காண்பிக்கப்படுகிறார்கள்.



இந்த சிந்தனையின் கீழ், அனைத்து ஆசிய மக்களும் 'வெற்றிகரமானவர்கள்' (அதாவது அவர்கள் செல்வந்தர்கள், நன்கு கற்றவர்கள்) என்றாகிறது.

எவ்வாறாயினும், இது ஒரு கட்டுக்கதை என்பதை நாங்கள் அறிவோம். ஏனெனில் இது கட்டமைப்பு ரீதியான இனவாதத்தின் யதார்த்தத்தை புறக்கணிப்பதுடன், பல ஆசியர்கள் எதிர்கொள்ளும் இனவாதத்தின் நேரடி அனுபவங்களை மறைக்கிறது.





முன்மாதிரி சிறுபான்மையினர் எனும் பட்டத்துடன் இணைக்கப்பட்ட படிவார்ப்பு சிந்தனைகளில் சில:

- அனைத்து சீன மக்களும் செல்வந்தர்கள்
- சீனர்கள் அனைவரும் கல்வியில் மிகுந்த கவனம் செலுத்துபவர்கள்
- சீனர்கள் அனைவரும் கடும் உழைப்பாளிகள்



முன்மாதிரி சிறுபான்மையினருடன் இணைக்கப்பட்ட படிவார்ப்பு சிந்தனைகளை கவனத்தில் கொள்ளும் போது, நேர்மறை படிவார்ப்பு சிந்தனை என எதுவும் இல்லை என்பதை நினைவில் கொள்வது அவசியம்.



- அனைத்து படிவார்ப்பு சிந்தனைகளும் தீங்கு விளைவிப்பதோடு, சீன கனேடியர்கள் எதிர்கொள்ளும் பல்வேறு அனுபவங்களையும் போராட்டங்களையும் புலப்படாதவாறு செய்கின்றன - **சீன கனடியர்கள் ஒரேசீரானவர்கள் அல்லர்!**

**இனவெறி மற்றும் வெறுப்புக்கு எதிரான ஆசியர்கள்**

TAMIL Canadian Centre for CIVIC ACTION

Chinese Canadian National Council Toronto Chapter

Ontario

# இனவெறி மற்றும் வெறுப்புக்கு எதிரான ஆசியர்கள்

TAMIL Canadian Centre for CIVIC ACTION

Chinese Canadian National Council Toronto Chapter

Ontario


முன்மாதிரி சிறுபான்மையினர் எனும் பட்டம் சீன கனேடியர்கள் அடக்குமுறையை எதிர்கொள்ளவில்லை என்று வாதிட முயல்கிறது!

சீன கனேடியர்கள் கட்டமைப்பு ரீதியான இனவாதத்தை அனுபவிக்கிறார்கள் என்பதையும் பலர் மொழித் தடைகள், வேலைவாய்ப்பு பாகுபாடு, குடியேற்ற நிலையின் பாதுகாப்பின்மை போன்ற கூடுதல் சிரமங்களை எதிர்கொள்கிறார்கள் என்ற உண்மையையும் இது புறக்கணிக்கிறது.

சீன கனேடியர்களுடனான எங்கள் பணியில், குறைந்த வருமானம் கொண்ட சீன கனேடியர்கள், புதியவர்கள், முதியவர்கள் போன்றவர்களின் பல்வேறு அனுபவங்களை நாங்கள் கண்டுள்ளோம்.

CCNCTO-வின் 2022 நிதி திரட்டல், சீனத் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் சுரண்டலின் அவல நிலையை எடுத்துரைத்தது

- வேலையில் எத்தனை தொழிலாளர்கள் துன்புறுத்தல், பாகுபாடு, சீண்டல், ஊதிய திருட்டு மற்றும் பிற வகையான சுரண்டல்களை அனுபவிக்கிறார்கள் என்பதை கண்டுணர்ந்து, அவர்களின் அனுபவங்களை முன்மாதிரி சிறுபான்மையினர் எனும் கட்டுக்கதை எவ்வாறு அழிக்க முயல்கிறது என்பதைக் காணலாம்.
- கட்டமைப்பு ரீதியான இனவாதம் காரணமாக, வெற்றியை உருவாக்க கடின உழைப்பு போதாது! முன்மாதிரி சிறுபான்மையினர் என்பது ஒரு கட்டுக்கதை என்பது தெளிவாகிறது. ஏனென்றால் அமைப்புகள் (பாடசாலை அமைப்புகள், அரசியல் அமைப்புகள், பொருளாதார அமைப்புகள் போன்றவை) உங்களுக்காக கட்டமைக்கப்படாதபோது (பெரும்பாலும் வெள்ளையர் அல்லாதவர்களை ஒதுக்கிவைக்கின்ற நிலையில்), அவர்கள் வெறும் 'கடின உழைப்பால் வெற்றி பெற முடியாது. '



அவர்கள் முன்மாதிரியானவர்கள் என்ற படிவார்ப்புக்குள் அடக்கப்படுவதால், சீனர்கள் (எதிர்ப்பதற்கு பதிலாக) இனவாதத்தை ஆதரிக்கும் வகையில் (அநீதிக்கு எதிராக அமைதியாக இருப்பது அடங்கலாக) நடந்துகொள்வர்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த படிவார்ப்பு ஆசிய சமூகங்களுக்கும் பிற இனமயப்படுத்தப்பட்ட சமூகங்களுக்கும் இடையே ஒரு பிளவை உருவாக்குகிறது. இது வெள்ளை மேலாதிக்கத்தை அகற்றுவது உட்பட இனமயமாக்கப்பட்ட சமூகங்கள் எதிர்கொள்ளும் போராட்டங்களின் மூல காரணியை எதிர்த்துப் போராடுவதை மிகவும் கடினமாக்குகிறது.

# கலாசார வெளிகளும் சேவைகளும்

**இனவெறி மற்றும் வெறுப்புக்கு எதிரான ஆசிரியர்கள்**



எங்களின் முந்தைய வெளியீடு, Chinatowns-ஐ சீன கலாசாரத்தை (பாகுபாடுகளுக்கு மத்தியில்) பாதுகாப்பாக கடைப்பிடிப்பதற்கான ஒரு நெகிழ்வுறுதி கொண்ட இடமாக உயர்த்திக் கூறியிருந்தாலும், இன்று அவ்வாறான இடங்கள் பல போராடி வருகின்றன.

- கனடா மற்றும் அமெரிக்கா முழுவதும் உள்ள பல சைனாடவுன்கள் நகர்மயமாகின்றன
- பல மக்கள் Chinatowns-ஐ விட்டு வெளியேறியுள்ளனர், இப்போது பல குறைந்த வருமானம் கொண்ட, பெரும்பாலும் வயதான குடியிருப்பாளர்கள், அப்பகுதியில் வாடகை, வீட்டு விலைகள் உயர்வதன் காரணமாக இடம்பெயர்ந்து வருகின்றனர்.

கலாசாரத்திற்கு ஏற்ற சேவைகள் (மற்றும் மொழியியல் சம்பந்தப்பட்ட சேவைகள்) தொடர்ந்து பற்றாக்குறையாகவே உள்ளன



**இது முக்கியமானது, ஏனென்றால் கலாசார காரணிகள் ஒருவருக்கு தேவையான சேவைகளுக்கான அணுகல், தகவல் தொடர்பு பாணிகளின் செயல்திறன், வழங்கப்பட்ட தகவல்களின் பொருத்தம் போன்றவற்றை பாதிக்கலாம்.**

- உதாரணமாக, உரைபெயர்ப்பு சேவைகள் உடனடியாக கிடைக்காத காரணத்தால், பெற்றோர்-ஆசிரியர் சந்திப்புகளில் எத்தனை மாணவர்கள் தங்கள் பெற்றோருக்கு மொழிபெயர்ப்பு செய்ய நேரிட்டிருக்கிறது?
- COVID-19 பெருந்தொற்றின் போது, சீன மொழியில் அல்லது ஏனைய மொழிகளில் தகவல்கள் கிடைக்கப்பெறாததால், தடுப்பூசிகளை போடுவதற்கான சந்திப்புகளை ஒழுங்கமைக்க தமது பெற்றோருக்கும் குடும்ப அங்கத்தவர்களுக்கும் உதவ வேண்டிய நிலை எத்தனை பேருக்கு ஏற்பட்டது?
-



# இன்று சீன கனேடிய சமூக உறுப்பினர்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகள் இருந்தாலும், எங்கள் சமூகங்கள் நெகிழ்வுறுதியுடன் உள்ளன

**ஒருவரையொருவர் உயர்த்துவதற்கு நாங்கள் ஒத்துழைப்புடன் செயற்படுகிறோம்**




உதாரணமாக, CCNCTO’s 2022 Fundraiser சமூக ஆற்றலினதும் நெகிழ்வுறுதியினதும் முக்கியத்துவத்தை வலியுறுத்தியுள்ளது.




சீனத் தொழிலாளர்களை ஆதரித்து, வலுப்படுத்துவதன் மூலம், CCNCTO ஆனது, நாம் இணைந்து பணியாற்றும்போது நமது சமூகம் வலுப்பெறுவதை நிரூபிக்கிறது! ஒருவரையொருவர் எவ்வாறு பாதுகாப்பாக வைத்திருப்பது என்பது எங்களுக்குத் தெரியும். மேலும் நாம் ஒருவரையொருவர் ஆதரிப்பதால், நம் அனைவருக்கும் மிகவும் சமமான சமூகத்தை உருவாக்க பணியாற்றலாம்!

**இனவெறி மற்றும் வெறுப்புக்கு எதிரான ஆசியர்கள்**

TAMIL Canadian Centre for CIVIC ACTION

Chinese Canadian National Council Toronto Chapter

Ontario



# மாற்றத்தை எவ்வாறு நான் உருவாக்குவது?

Chinatown-இல் உள்ள உள்ளூர் வர்த்தகங்களையும் குடும்பங்கள் முன்னெடுக்கும் வர்த்தகங்களையும் ஆதரிப்பது!

- நீங்கள் உங்கள் குடும்பத்தவர்கள் அல்லது நண்பர்களுடன் செல்லக்கூடிய உணவகங்கள், வர்த்தக நிலையங்கள் குறித்து சிந்தியுங்கள்



- நீங்கள் சமூக ஊடக செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தால், Chinatown-இல் நீங்கள் ஆதரிக்கும் கடைகள் அல்லது உணவகங்களைப் பகிர, படங்களை எடுக்கலாம் அல்லது காணொளிகளை உருவாக்கலாம்!

**இனவெறி மற்றும் வெறுப்புக்கு எதிரான ஆசிரியர்கள்**

TAMIL Canadian Centre for CIVIC ACTION

Chinese Canadian National Council Toronto Chapter

Ontario




உங்கள் சீன நண்பர்கள், குடும்பத்தினர் மற்றும் சகாக்களுடன் கலாசார ரீதியாக அல்லது மொழியியல் ரீதியாக பொருத்தமான சேவைகளில் அவர்களின் அனுபவங்களைப் பற்றி பேசுங்கள்

- அவர்களுக்கு ஏதேனும் நேர்மறையான அனுபவங்கள் உண்டா?
- ii. அவர்கள் எதிர்மறையான அனுபவங்களைப் பெற்றிருந்தால், எப்படி விடயங்களை மேம்படுத்த முடியும்? மற்றவர்களுக்கு மாற்றத்தை உருவாக்க இந்த எதிர்மறை அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள யாராவது இருக்கிறார்களா?

# What else can I do?

இனவெறி மற்றும் வெறுப்புக்கு எதிரான ஆசிரியர்கள்


TAMIL Canadian Centre for CIVIC ACTION

Chinese Canadian National Council Toronto Chapter

Ontario

Stay in touch with CCNCTO through **WeChat** or follow us on Instagram **@CCNCTO**

Check out our most recent **2021 anti-Asian racism report** and our **Frontline Workers Pandemic report**




Fill in **this form** to join our volunteer team and support our various organizing, anti-racism, and equity work

Stay up to date about our events and the workshops, programs, and events we hold for Chinese Canadian community members!

- Talk to others in your social circles about racism
- Call out all levels of racism
- Share our **resources** with others
- Engage with local community members and organizations to advocate for change





## Check out these Ontario-based community organizations that serve and empower Chinese Canadians today!

இனவெறி மற்றும் வெறுப்புக்கு எதிரான ஆசியர்கள்

Tamil Canadian Centre for Civic Action

Chinese Canadian National Council Toronto Chapter

Ontario

- **(AQUA) Asian Queer Alliance** @asianqueeralliance an organization serving queer Asians of marginalized genders in Tkaronto
- **Butterfly: Asian and Migrant Sex Worker Support Network** @butterflycsw an organization that provides support to, and advocates for, the rights of Asian and migrant sex workers
- **Chinese Canadian Collective** @chinesecanadianco a collective that examines Chinese diasporic issues and experiences through hosting community events and digital campaigns
- **Friends of Chinatown Toronto** @friendsofchinatownto an organization fighting for housing justice, racial justice, and economic justice in Toronto's downtown
- **Migrant Rights Network** @migrantrightsca a cross-Canada alliance to combat racism and fight for migrant justice
- **Ontario Hong Kong Youth Action** @ohkya___ a youth-led group aiming to advocate and support the Hong Kong diaspora
- **project1907** @proj1907 a grassroots group of Asian women, working to elevate Asian voices that are underrepresented and undervalued in mainstream discourse

# Works Cited

Chinese Canadian National Council Toronto Chapter & Project 1907 (2022). *Another Year: Anti-Asian Racism Across Canada Two Years Into The COVID-19 Pandemic.* Retrieved from https://ccncsj.ca/wp-content/uploads/2022/03/Anti-Asian-Racism-Across-Canada-Two-Years-Into-The-Pandemic_March-2022.pdf

இனவெறி மற்றும் வெறுப்புக்கு எதிரான ஆசியர்கள்

TAMIL Canadian Centre for CIVIC ACTION

Chinese Canadian National Council Toronto Chapter

Ontario